**செய்தி வெளியீடு எண்: 456** **நாள்: 02.8.2012**

# செய்தி வெளியீடு

தமிழ்நாட்டில், திருவள்ளூர் மாவட்டம் முதல் கன்னியாகுமரி மாவட்டம் வரை 1076 கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரை பகுதியில், தமிழ்நாட்டிலிருந்து கடல்வழியாக அத்தியாவசியப் பொருட்கள் கடத்தப்படுவதைத் தடுக்கவும், தமிழ்நாட்டிற்கு தீவிரவாதிகள் ஊடுருவுவதைத் தடுக்கவும், கடலோரப் பாதுகாப்பு குறித்த நுண்ணறிவுத் தகவல்களைப் பெறுவதற்கும் அமைக்கப்பட்ட கடலோரப் பாதுகாப்புப் படை தன்னுடைய பணியை திறம்பட மேற்கொள்ளும் வகையில், அனைத்து வகையான பாதைகளிலும் துரிதமாக செல்லக்கூடிய சிறப்பு வாகனங்களை கடலோர பாதுகாப்புப் படையின் 12 காவல் நிலையங்களுக்கும் தலா ஒரு மோட்டார் சைக்கிள் (All Terrain Motor cycle) மற்றும் ஒரு ஜீப் (All Terrain Jeep) அளிக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஏற்கெனவே உத்தரவிட்டார்கள்.

தற்போது புனித ஜார்ஜ் கோட்டை முதல் பெசன்ட்நகர் பகுதி வரை உள்ள மீக நீளமான மணற்பாங்கான கடற்கரைப் பகுதியில், அதிகாலை முதல் இரவு வரை நடை பயிற்சி மற்றும் பொழுதுபோக்கிற்காக அனைத்து தரப்பு மக்களும் மெரினா, எலியட்ஸ் மற்றும் திருவான்மியூர் கடற்கரை பகுதிகளுக்கு தினந்தோறும் அதிக அளவில் வருகை புரிவதைக் கருத்தில் கொண்டும், இப்பகுதிகளில் சமூக விரோதச் செயல்கள் ஏற்படாமல் தவிர்த்து மக்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் வகையிலும், கடற்கரை வழியாக மாநிலத்திற்குள் ஊடுருவல் ஏற்படுவதைத் தவிர்க்கும் வகையிலும் காவல் துறையினர் தங்கள் பணிகளைத் திறம்பட மேற்கொள்ள ஏதுவாக, கடற்கரைப் பகுதிகளில் பயணம் செய்வதற்கேற்ற ஊர்திகள் காவல்துறையினரின் பயன்பாட்டிற்கு மிகவும் அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு, காவல்துறையினருக்கு அனைத்து நிலப்பரப்புகளிலும் செல்லக்கூடிய (All Terrain Vehicle) 9 வாகனங்களை 34 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் செலவில் வாங்கி, மெரினா கடற்கரைப் பகுதியில் ரோந்துப் பணிகளை மேற்கொள்ள 6 வாகனங்களையும், எலியட்ஸ் கடற்கரைப் பகுதியில் ரோந்துப் பணிகளை மேற்கொள்ள 2 வாகனங்களையும், திருவான்மியூர் கடற்கரைப் பகுதிகளில் ரோந்துப் பணிகளை மேற்கொள்ள 1 வாகனத்தையும் வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

அரசின் இந்த நடவடிக்கைகள் மூலம் காவல்துறையினர் கடற்கரைப் பகுதிகளில் குற்றச் செயல் நடப்பதை தடுக்கவும், இடர் சமயங்களில் விரைந்து சென்று, மக்களை பாதுகாக்கவும் வழிவகை ஏற்படும்.

*****

வெளியிடு:- இயக்குநர்,செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9.
நாள்:- 2.8.2012.